<u>**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**</u>

**O.S. No. 120/2006**

Deposition of **<u>P.W.-1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 04.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பொன்னுசாமி Father Name : கலியகவுண்டர்

Village : சின்னமசமுத்திரம் Taluk : பெத்தநாயக்கன்பாளையம்

Calling : Age : 62

துவக்க நேரம் : 12.17 P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>**வாதிகள் தரப்பு முதல் விசாரணை**</u> : நான் இவ்வழக்கில் 3-ம் வாதி. வாதி தரப்பு 1-ம் சாட்சி. நான் என்னுடைய முதல் விசாரணைக்கான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லியவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| **வ. எண்.** | **ஆவணம்** | **வகைப்பாடு** | **தன்மை** |
|---|---|---|---|
| 1 | கடந்த 15.04.1951-ஆம் தேதியிட்ட பர்வதம்மாள் என்பவருக்கு எழுதிவைத்த பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | 09.09.1989-ஆம் தேதியிட்ட ஆத்தூர் வட்டாட்சியர் தாவா சொத்து குறித்து பட்டா வழங்கி பிறப்பித்த உத்தரவு | உண்மை நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 10.04.1969-ஆம் தேதியிட்ட காங்கி கவுண்டர், கோபால் வகையறாவிற்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| 4 | தாவா சொத்திற்கான கந்தாய ரசீதுகள் (எண்ணிக்கை 25 ) | அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 06.04.1988-ஆம் தேதியிட்ட 2-ஆம் வாதியின் தாயார் ஆத்தூர் ஜமாபந்தி முன்னிலையில் கொடுத்த புகார் | அலுவலக நகல் | வா.சா.ஆ.5 |
| 6 | 22.07.2005-ஆம் தேதியிட்ட 1-ஆம் வாதியின் பெயரில் உள்ள கணினி பட்டா | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.6 |
| 7 | 01.02.2006-ஆம் தேதியிட்ட 2-ஆம் வாதியின் பெயரில் உள்ள கணினி பட்டா | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.7 |
| 8 | 21.10.2002-ஆம் தேதியிட்ட 2-ஆம் வாதி பெயரில் உள்ள சிட்டா, அடங்கல் | உண்மை நகல் | வா.சா.ஆ.8 |
| 9 | 09.10.2003-ஆம் தேதியிட்ட மின் கட்டண ரசீது | அசல் | வா.சா.ஆ.9 |
| 10 | 03.12.1987-ஆம் தேதியிட்ட மின்வாரிய துறை அதிகாரிகள் 2-ஆம் வாதியின் தாயாருக்கு அனுப்பிய அறிவிப்பு | அசல் | வா.சா.ஆ.10 |
| 11 | 02.12.1981-ஆம் தேதியிட்ட 2-ஆம் வாதியின் தாயார் ஆத்தூர் வட்டாட்சியருக்கு தாவா சொத்தை உட்பிரிவு செய்ய செலுத்திய தொகைக்கான ரசீது | அசல் | வா.சா.ஆ.11 |
| 12 | 28.12.2005-ஆம் தேதியிட்ட வாதிகள், பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ.12 |
| 13 | 30.12.2005-ஆம் தேதியிட்ட 4-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.13 |
| 14 | 29.12.2005-ஆம் தேதியிட்ட 2-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.14 |
| 15 | 29.12.2005-ஆம் தேதியிட்ட 1-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.15 |
| 16 | 21.03.2025-ஆம் தேதியிட்ட 5 முதல் 7 வாதிகள் சேர்ந்து எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.16 |
| 17 | 22.01.2025-ஆம் தேதியிட்ட 4-ஆம் வாதி ராஜேந்திரன் | கணினி | வா.சா.ஆ.17 |

| | | | |
|---|---|---|---|
| | என்பவரது இறப்பு சான்று | பதிவிறக்க நகல் | |
| 18 | 30.01.2025-ஆம் தேதியிட்ட 4-ஆம் வாதி ராஜேந்திரனின் வாரிசு சான்று | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.18 |
| 19 | 05.07.1980-ஆம் தேதியிட்ட பர்வதம்மாள் அவரது மகன் கலிய கவுண்டர், காங்கி கவுண்டர், காங்கி கவுண்டரின் மைனர் மகன் பெரியசாமி ஆகியோர்கள் எழுதி பதிவு செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.19 |
| 20 | 28.04.2011-ஆம் தேதியிட்ட கலியகவுண்டர் மற்றும் மகன்கள் பொன்னுசாமி, ராஜேந்திரன் ஆகியோர்கள் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.20 |

மேற்கண்ட ஆவணங்களில் 16, 20 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால் பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.37 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

sd/-D.Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by L.Kalaiselvi - O.S. No.120/2006, Dt.04.09.2025.